(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 1(6).]

# பாராளுமன்றம்

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

2015 நவெம்பர் 26 வியாழக்கிழமை வெளியிடப்பட்டது

## 2015 திசெம்பர் 07, திங்கட்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

19/ '15

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) 2011 – 2014 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தினுள் கூட்டுறவு அபிவிருத்தி நிதியம் மற்றும் கூட்டுறவு மிகை நிதியத்தின் ரூபா 897.06 மில்லியன் தொகையை, 1972 ஆம் ஆண்டின் கூட்டுறவுச் சங்க சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக துஷ்பிரயோகம் செய்தல் மற்றும் தவறான முறையில் கையாள்வதற்கு இடமளித்தல் ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் முன்னாள் அமைச்சருக்கும் மற்றும் முன்னாள் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கும் எதிராக பொலிஸ் நிதிசார் குற்றப் பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள முறைப்பாடு மீதான புலனாய்வுகளின் முன்னேற்றம் யாதென்பதையும்;

(ii) மேற்படி நிதி துஷ்பிரயோகம் மற்றும் தவறான கையாளுகை தொடர்பாக பொதுச் சொத்துக்கள் சட்டத்தின் கீழ் புலனாய்வொன்று மேற்கொள்ளப் படுகின்றதா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி நிதி துஷ்பிரயோகம் மற்றும் தவறான கையாளுகை தொடர்பாக நிறுவன மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) இழக்கப்பட்டுள்ள பணத் தொகையை மீள அறவிடுவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரின் தற்றுணிபின் பிரகாரம் பொதுவாக அரச நிதியங்களின் துஷ்பிரயோகத்தை தடுப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

80/ '15

கௌரவ சந்திம கமகே,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) சுமார் கடந்த ஒரு தசாப்த காலமாக தொல்பொருட்கள் மற்றும் புதைபொருட்கள் பெருமளவில் அழிக்கப்பட்டுள்ளமை மற்றும் திருடர்கள் கைப்பற்றியுள்ளமை பற்றி பல்வேறு ஊடகங்கள் மூலம் வெளியிடப்பட்டுள்ளதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இது தொடர்பாக தொல்பொருளியல் திணைக்களத்திற்குக் கிடைத்துள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) ஊடகங்கள் மூலம் வெளியிடப்பட்டுள்ள சம்பவங்கள் மற்றும் கிடைத்துள்ள முறைப்பாடுகள் தொடர்பாக தொல்பொருளியல் திணைக்களம் சட்ட நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள சம்பவங்கள் மற்றும் முறைப்பாடுகளின் எண்ணிக்கை தனித்தனியே யாது என்பதையும்;

(iv) மேற்படி சட்ட நடவடிக்கைகள் மூலம் தவறாளிகளாக்கப்பட்டுள்ள ஆட்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(v) இவ்வாறான சம்பவங்கள் மீண்டும் ஏற்படாதிருக்கும் பொருட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2015 திசெம்பர் 08, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

164/ '15

கௌரவ லக்கி ஜயவர்தன,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வடக்கு கிழக்கில் இராணுவ நடவடிக்கை கடமையில் ஈடுபட்டிருந்த பெருந்தொகையான இலங்கை இராணுவ வீரர்கள் 12 வருடங்கள் இராணுவத்தில் கடமையாற்றிவிட்டு இராணுவ சேவையிலிருந்து நீங்கியுள்ளனர் என்பதையும்;

(ii) இவர்கள் இன்றளவில் நிர்க்கதி நிலையில் உள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இராணுவத்தில் 12 வருடங்கள் கடமையாற்றிவிட்டு இராணுவ சேவையிலிருந்து நீங்கியுள்ள வீரர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இவர்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) நாட்டுக்காக உயிர் தியாகத்துடன் செயலாற்றிய இவர்களுக்கு பாதியளவு ஓய்வூதியம் வழங்கப்படுதல் பொருத்தமானதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) ஆமெனின், மேற்படி பாதியளவு ஓய்வூதியத்தை வழங்க நடவடிக்கை எடுக்கும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

227/ '15

கௌரவ சுனில் ஹன்துன்னெத்தி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சுனாமி பேரழிவினால் சேதத்துக்கு உள்ளாகிய தமது வீட்டுக்குப் பதிலாக கூட்டாட்சி வீடுகளிலிருந்து ஒரு வீட்டைப் பெற்றுக்கொண்ட திரு. டபிள்யூ. பிரதீப்பின் பிள்ளையை 2013 ஆம் ஆண்டில் மாத்தறை சுஜாதா வித்தியாலயத்தில் முதலாம் வகுப்புக்குச் சேர்ப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப் பத்திரம் நிராகரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மேன்முறையீடு நிராகரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி நிராகரிப்புகளின் பின்னர், சம்பந்தப்பட்ட சிறுமியை பாடசாலையில் அனுமதித்துவிட்டு அறிவிக்குமாறு தெரிவித்து அமைச்சின் செயலாளர் மற்றும் தேசிய பாடசாலைகள் பணிப்பாளர் பாடசாலை அதிபருக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளனரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி எழுத்து மூலமான அறிவித்தல் தொடர்பாக பாடசாலை அதிபரின் பதிற்செயற்பாடு யாதென்பதையும்;

(iii) மேற்படி கோரிக்கை நிராகரிக்கப்பட்டு, சிறுமி பாடசாலையில் சேர்த்துக்கொள்ளப்படவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(iv) மேற்படி சிறுமி பாடசாலையில் சேர்த்துக் கொள்ளப்படாதமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி நிராகரிப்புத் தொடர்பாக முறைசார்ந்த விசாரணையொன்று நடத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி சிறுமிக்கு ஏற்பட்டுள்ள அநீதி தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

# 2015 திசெம்பர் 09, புதன்கிழமை
# வாய்மூல விடைக்கான வினாக்கள்

177/ '15

கௌரவ எம். எச். எம். சல்மான்,— அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சுனாமி பேரழிவின் காரணமாக வீடுகளை இழந்தவர்களது பிரச்சினை தொடர்பில், அம்பாறை அரசாங்க அதிபர் / மாவட்ட செயலாளர் விழிப்புணர்வூட்டப்பட்ட சனாதிபதி செயலகத்தின் SD/8/2 ஆம் இலக்க, 2010.09.30 ஆம் திகதிய கடிதம், பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் MNBD/06/AD/CO/16 ஆம் இலக்க, 2010.11.02 ஆம் திகதிய கடிதம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் MDM/AS/DM/46 ஆம் இலக்க, 2010.09.23 ஆம் திகதிய கடிதங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை;

(ii) இவற்றின் தற்போதைய முன்னேற்றம் யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) சுனாமி பேரழிவின் காரணமாக அம்பாறை மாவட்டத்தில் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் பிரிவில் வீடுகளை இழந்த குடும்பங்களின் எண்ணிக்கை யாது;

(ii) இவர்களது பெயர் மற்றும் முகவரி யாது;

(iii) வீடுகளை இழந்தவர்களில் இதுவரை நிரந்தர வீடுகள் வழங்கப்பட்டுள்ள நபர்களின் பெயர் மற்றும் முகவரி யாது;

என்பதை அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

239/ '15

கௌரவ விமலவீர திசாநாயக்க,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வங்கிகளில் இரண்டு இலட்சம் ரூபா அல்லது அதிலும் குறைந்த தொகைக்கு அடகு வைக்கப்பட்டுள்ள தங்க நகைகளை மீட்கும் போது, மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் அதற்காக அறவிடப்படும் அதிக வட்டி மற்றும் அபராதத் தொகையை பதிவழிப்புச் செய்ய அரசாங்கம் கொள்கை ரீதியான தீர்மானமொன்றை எடுத்திருக்குமானால், அதனுடன் தொடர்புடையதாக வங்கிகளுக்கு அனுப்பப்பட்டுள்ள சுற்றிக்கைகளின் பிரதிகளை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(ii) ஒவ்வொரு வங்கி மூலமும் மேற்படி வட்டியையும் அபராதத் தொகையையும் பதிவழிப்புச் செய்துள்ள பயனாளிகளின் எண்ணிக்கை தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) அரசாங்கம் சம்பந்தப்பட்ட வங்கிகளுக்கு அதற்கான நிதி ஏற்பாடுகளைச் செய்துள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், குறித்த பணத்தொகை ஒவ்வொரு வங்கி ரீதியாக தனித்தனியாக யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2015 திசெம்பர் 10, வியாழக்கிழமை
## வாய்மூல விடைக்கான வினாக்கள்

178/ '15

கௌரவ (டாக்டர்) ஏ.ஆர்.ஏ. ஹபீஸ்,— அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) திரு. எம்.எம்.ஏ. நிப்ரான் மற்றும் அவரது குடும்ப அங்கத்தவர்கள் வசித்த திக்வெல்ல, யோனகபுர, வெதகெதர, 264/1ஆம் இலக்க வீடு மலைசார்ந்த பிரதேசத்தில் அமைந்திருந்தது என்பதையும்;

(ii) 2012.09.22ஆம் திகதி பெய்த மழையின் காரணமாக உடைந்து சேதமான இந்த வீட்டில் எஞ்சியிருந்த சமையலறையும் 2015.09.02 ஆம் திகதி அதிகாலை 1.45 மணியளவில் அருகாமையில் இருந்த மண்மேடு சரிவுக்குள்ளானமையால் முழுமையாக அழிவடைந்துள்ளது என்பதையும்;

(iii) இது தொடர்பில் பிரதேசத்தின் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் விழிப்புணர்வூட்டப்பட்டுள்ள போதிலும் இதுவரை எவ்விதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) சிறு பிள்ளைகள் மற்றும் மனைவியுடன் ஒரு குடும்பமாக வாழ்வதற்கு இருந்த மேற்படி வீடு முழுமையாக உடைந்து சேதமடைந்ததன் மூலமும் நிரந்தர வாழ்வாதாரம் இன்மையாலும் நிர்க்கதி நிலைக்கு உள்ளாகியுள்ள திரு. நிப்ரானுக்கு மேற்படி வீட்டை கட்டிக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

240/ '15

கௌரவ பந்துல குணவர்தன,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இடர் நேர்வு அடிப்படையிலான நிறையேற்றல் முறைக்கமைய இலங்கையின் வெளிநாட்டு ஒதுக்கங்களின் போதுமான தன்மை பற்றி திருப்தியடைகின்றாரா என்பதையும்;

(ii) சர்வதேச நாணய நிதியத்தின் இடர் நேர்வு அடிப்படையிலான நிறையேற்றலின் புதிய முறையின் பயன்பாட்டின் போது X, STD, OPL அத்துடன் M2 மாறிகளின் தரவுகளுக்கமைய 2000 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில், மிதக்கும் செலாவணி வீத முறையின் கீழ் வெளிநாட்டு ஒதுக்கங்களின் போதுமாந்தன்மை ஒவ்வொரு ஆண்டு வாரியாகவும் யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) 2015 ஆம் ஆண்டில் கடந்த 9 மாத காலத்தில் இலங்கையின் வெளிநாட்டு ஒதுக்கங்களின் போதுமாந்தன்மை யாதென்பதையும்;

(ii) மேற்படி நிலையில் தாக்கத்தை ஏற்படுத்திய பிரதானமான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2015 திசெம்பர் 11, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

204/ '15

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மத்திய மாகாணத்தின் கண்டி, தெல்தொட்ட, முஸ்லிம் மகா வித்தியாலயத்திற்கு (நவோத்யா பாடசாலை) புதிய இரண்டு மாடிக் கட்டடமொன்றை நிர்மாணிக்க வேண்டியதன் அவசியத்தைக் கவனத்திற்கொண்டு சனாதிபதி செயலாளரின் பணிப்புரையின் பிரகாரம் மத்திய மாகாண கல்வி மற்றும் முதலமைச்சரின் செயலாளரது CPC/CMC/3/1/1 இலக்கமும் 2012.10.24 திகதியும் கொண்ட கடிதம் மூலமாக கண்டி வலயக் கல்விப் பணிப்பாளரிடமிருந்து அறிக்கையொன்று கோரப்பட்டதென்பதையும்;

(ii) அதற்கிணங்க 2012.11.12 ஆந் திகதி வலயப் பணிப்பாளர் களப் பரிசோதனையை மேற்கொண்டு அங்கு கல்வி கற்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் வகுப்புக்களின் எண்ணிக்கைக்கிணங்க இடவசதி போதாதென்பதால் புதிய இரண்டு மாடிக் கட்டடமொன்றைப் பெற்றுக்கொடுப்பது பொருத்தமானதென பரிந்துரைத்துள்ளாரென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) இந்த வித்தியாலயத்திற்காக புதிய இரண்டு மாடிக் கட்டடமொன்றை நிர்மாணிக்க நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதை இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

241/ '15

கௌரவ பந்துல குணவர்தன,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2000 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரை இலங்கைக்கு சொந்தமான மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்கங்களின் இறக்குமதிச் சாத்தியவளம் (மாதங்களில்) ஒவ்வொரு வருடத்துக்கமைய வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) வியாபாரப் பண்டங்கள் தொடர்பில் கணிப்பிடப்பட்ட மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்கங்களின் இறக்குமதிச் சாத்தியவளம், வியாபாரப் பண்டங்கள் மற்றும் பணிகள் தொடர்பில் சீராக்கல் செய்யுமிடத்து, ஒவ்வொரு வருடத்துக்கமைய மாறுபடும் விதம் யாதென்பதையும்;

(iii) 2000 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரை மொத்த வெளிநாட்டுச் சொத்துக்களின் இறக்குமதிச் சாத்தியவளத்தின் பெறுமதி ஒவ்வொரு வருடத்துக்கமைய வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) 2015 ஆம் ஆண்டின் முதல் 9 மாதங்களினுள் உத்தியோகபூர்வ ஒதுக்கங்களின் இறக்குமதிச் சாத்தியவளம் எவ்வாறு இருந்ததென்பதையும்;

(v) மேற்படி நிலைமையில் தாக்கத்தை எற்படுத்திய காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2015 திசெம்பர் 12, சனிக்கிழமை
## வாய்மூல விடைக்கான வினாக்கள்

205/ '15

கௌரவ எம். எச். எம் சல்மான்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மடவல கடைவீதி, பங்களாகெதர, 21 ஆம் இலக்கத்தில் வசிக்கும் திரு. ஏ.எம். சஹாப்தீன், க/மதீனா தேசிய பாடசாலையில் ஆரம்பப் பிரிவில் தொழிலாளராக 2006 ஆம் ஆண்டுதொடக்கம் பணிபுரிகின்றார் என்பதையும்;

(ii) இவரின் சேவை மற்றும் சேவைக்காலத்தை கவனத்திற்கொண்டு அமய அல்லது தற்காலிக அடிப்படையில் சேவையில் அமர்த்துவதற்காக உரிய ஆவணங்கள் அடிக்கடி மத்திய மாகாண கல்வித் திணைக்களத்துக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட போதிலும், இது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்பதையும்;

(iii) இறுதியாக, 2014.11.18ஆம் திகதிய விண்ணப்பப்படிவம், அதிபர்/வலயக் கல்விப் பணிப்பாளரின் சிபாரிசுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) திரு. சஹாப்தீனுக்கு அமய அல்லது தற்காலிக அடிப்படையில் தொழிலாளர் பதவியொன்றை வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

229/ '15

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— அரச தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கை வங்கியில் உள்ளக உத்தியோகத்தர் பயிலுநர்களை ஆட்சேர்ப்பதற்கான (2014) போட்டிப் பரீட்சையில் இடம்பெற்ற முறைகேடுகள் மற்றும் அநீதிகள் தொடர்பாக அவர் அறிவாரா?

(ஆ) (i) 2014.06.08 ஆந் திகதி களனிப் பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்ட மேற்படி போட்டிப் பரீட்சையில் தோற்றிய பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளில் பரீட்சையில் சித்தியடைந்த மற்றும் சித்தியடையாதவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(iii) பரீட்சையில் சித்தியடைந்த அனைவருக்கும் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) இன்றேல், ஏன் என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) දූර/2002 சுற்றறிக்கையின் படி இலங்கை வங்கியின் அனைத்து உள்ளக பதவியுயர்வுகளின் முறையியலொன்று தீர்மானிக்கப்பட்டிருக்கையில் அனைத்துப் பாடங்களுக்கும் 40 என்ற புள்ளிகளின் வரையறை 50 ஆக அதிகரிக்கப்பட்டமைக்கான காரணம் யாதென்பதையும்;

(ii) இது தொடர்பாக பரீட்சார்த்திகள் முன்கூட்டியே விழிப்புணர்வூட்டப் பட்டிருந்தார்களா என்பதையும்;

(iii) ஏற்றுக்கொள்ளப்பட்ட முறையியலுக்கமைய இந்த பரீட்சை நடத்தப்பட்டுள்ளதென உடன்படுகின்றீரா என்பதையும்;

(iv) பரீட்சைப் பெறுபேறுகளை வழங்குவதற்கு 5 மாதங்கள் கடந்துள்ளதுடன் பெறுபேறுகளை மீண்டும் மதிப்பிடுவதற்கு வாய்ப்பு வழங்கப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்;

(v) பாதிக்கப்பட்ட இலங்கை வங்கி உத்தியோகத்தர்கள் சார்பில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

## 2015 திசெம்பர் 14, திங்கட்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

242/ '15

கௌரவ பந்துல குணவர்தன,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2000ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரை,

(i) அரசாங்கத்தின் வெளிநாட்டுச் சொத்துக்கள்;

(ii) இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டுச் சொத்துக்கள்;

(iii) வைப்புக்களை பெற்றுக்கொள்ளும் நிறுவனங்களின் வெளிநாட்டுச் சொத்துக்கள்;

(iv) ஒதுக்கங்களுக்கேற்புடைய பொறுப்புகள்;

(v) தேறிய சர்வதேச ஒதுக்கம்;

ஒன்றுதிரண்ட விதம், ஒவ்வோர் ஆண்டுக்கமைய வெவ்வேறாக யாதென்பதை அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) இலங்கையர்களால்/ அரசாங்கத்தினால் வெளிநாடுகளில் மேற்கொள்ளப் பட்டுள்ள நேரடி வெளிநாட்டு முதலீடுகள் யாவை என்பதையும்;

(ii) அவ்வாறான முதலீடுகள் அரசாங்கத்துக்கு சொந்தமான சொத்துக்களாக, மேலே குறிப்பிடப்பட்ட புள்ளி விபரத் தரவுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) இன்றேல், ஏன் என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) 2000 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரை வெளிநாட்டு ஒதுக்கங்களில் தங்கத்தின் மீதி மாறுபட்டுள்ள விதத்தை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

245/ '15

கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) விளையாட்டுத்துறை அமைச்சினால் மாகாண மற்றும் மாவட்ட மட்டத்தில் 25 விளையாட்டரங்குகள் நிர்மாணித்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளமையை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி விளையாட்டரங்குகளில் ஏற்கனவே பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள மற்றும் திறந்து வைக்கப்பட்டுள்ள விளையாட்டரங்குகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(ii) இதுவரை வேலைகள் பூர்த்தி செய்யப்படாத விளையாட்டரங்குகளின் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் திகதி யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

251/ '15

கௌரவ பிமல் ரத்நாயக்க,— மகளிர், சிறுவர் அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2010, 2011, 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் நெருங்கிய உறவினர்களால் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டதாக பொலிஸிற்கும் இலங்கை பெண்கள் பணியகத்திற்கும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கும் கிடைக்கப் பெற்றுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை, ஒவ்வொரு வருடத்தின் அடிப்படையில் தனித்தனியே எவ்வளவென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2015 திசெம்பர் 15, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

87/ '15

கௌரவ டலஸ் அழகப்பெரும,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ரக்னா ஆரக்ஷன லங்கா லிமிட்டட் பாதுகாப்பு அமைச்சுடன் இணைக்கப்பட்டுள்ள ஒரு நிறுவனமாகுமென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அது தாபிக்கப்பட்ட ஆண்டு யாதென்பதையும், அவ்வாண்டு முதல் 2015 வரை கம்பனியின் கணக்குகள் பற்றிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை தனித்தனியாக சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கம்பனி மூலம் பாதுகாப்புச் சேவை வழங்கப்பட்ட அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(ii) பாதுகாப்பு வழங்குவதற்காக மேற்படி நிறுவனங்களுடன் உடன்படிக்கை செய்துகொண்ட ஆண்டு, திகதி மற்றும் நிறுவனங்கள் தனித்தனியாக யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) 2015 சனவரி முதல் இற்றை வரையிலான காலகட்டத்தில் மேற்படி கம்பனியை சேவை வழங்குவதிலிருந்து அகற்றியுள்ள அரச நிறுவனங்கள் உள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை யாவையென்பதையும்;

(iii) அவ்வாறு அகற்றுவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) அதற்குப் பதிலாக உபயோகப்படுத்தப்பட்டுள்ள பாதுகாப்பு கம்பனிகள் யாவையென்பதையும்;

(v) மேற்படி பதிலீட்டுக் கம்பனிகளின் பணிப்பாளர்களது பெயர்கள் தனித்தனியாக யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) மேற்படி கம்பனி ஆரம்பிக்கப்பட்டது முதல் வருடாந்தம் ஈட்டியுள்ள வருமானம் மற்றும் இலாபம் எவ்வளவென்பதையும்;

(ii) பொதுத் திறைசேரிக்கு வருடாந்தம் வழங்கியுள்ள பணத்தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

247/ '15

கௌரவ மஹிந்தானந்த அளுத்கமகே,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சுகததாச தேசிய விளையாட்டுத் தொகுதி அதிகார சபைக்கு மாதாந்தம் ரூபா15 இலட்சத்துக்கும் அதிகமான வருமானத்தை பெற்றுத்தந்த "D" வாகன தரிப்பிடம் கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்காதிருந்த ஆளொருவருக்கு 2015 .01.30 ஆம் திகதிக்கு அண்மித்ததொரு திகதியில் குறைந்த விலையில் பிரத்தியேகமாக பெற்றுக்கொடுக்கப்பட்டதென்பதையும்;

(ii) இவர் இற்றைவரை மேற்படி அதிகார சபைக்கு எவ்வித பணத் தொகையையும் செலுத்தவில்லையென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி முறைகேடான கொடுக்கல் வாங்கல் பற்றி ஆராய்ந்து மீண்டும் இவ்வாகனத் தரிப்பிடத்தை மீளக் கையகப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(ii) மேற்படி வாகன தரிப்பிடம் கேள்விப்பத்திர நடைமுறைகளுக்கு புறம்பாக குத்தகைக்கு விடப்பட்டிருப்பின், இதற்கு பொறுப்புக்கூற வேண்டியவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

254/ '15

கௌரவ பிமல் ரத்நாயக்க,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில்,

(i) கூடுதலான சிறுவர் துர்நடத்தை சம்பந்தமான வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ள 10 நீதிமன்றங்கள், ஒவ்வொரு வருட அடிப்படையில் முறையே யாவையென்பதையும்;

(ii) மேற்படி நீதிமன்றங்களில் சிறுவர் துர்நடத்தை சம்பந்தமான வழக்குகளில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தவறாளிகளென நிரூபிக்கப்பட்டுள்ள வழக்குகளின் எண்ணிக்கை ஒவ்வொரு வருட அடிப்படையில் தனித்தனியே எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு நீதிமன்றத்திலும் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தவறாளிகளான வழக்குகளின் எண்ணிக்கையானது தாக்கல் செய்யப்பட்ட மொத்த வழக்குகளின் எண்ணிக்கையின் சதவீதமாக என்னவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?